**சுருக்கம்**

பொதுப்பணித்துறை – பாசனம் – தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டம், வைரவனார் அணைக்கட்டில் 18–ஆம் கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு ரூ.33.55 கோடி மதிப்பீட்டிற்கு இரண்டாம் திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடப்படுகிறது.

---

பொதுப்பணி (டபிள்யூ1) த்துறை

அரசாணை (நிலை) எண். 107 நாள்: 18.06.2009

படிக்க:

1. அரசாணை (நிலை) எண். 200, பொதுப்பணித்துறை நாள் 21.05.1999.
2. அரசாணை (நிலை) எண். 397, பொதுப்பணித்துறை, நாள் 14.08.2000.
3. அரசாணை(நிலை)எண். 56,பொதுப்பணித்துறை, நாள் 01.3.2006.

மீண்டும் படிக்க:

4. முதன்மை தலைமைப் பொறியாளர் கடித எண். எஸ்.7 (4) 53800/2003, ஆர்.ஐ.டிஎப். IX, நாள் 17.09.2008.

------

**ஆணை:**

பார்வை 1–ல் படிக்கப்பட்ட அரசாணையில் தேனி மாவட்டம், உத்தமபாளையம் வட்டத்தில் நீர்பாசனத்திற்காக வைரவனார் அணைக்கட்டிலிருந்து 100 மீட்டர் மேலே தலை மதகு கட்டி 18–ஆம் கால்வாய் அமைக்கும் திட்டத்திற்காக ரூ.2652 இலட்சம் மதிப்பீட்டிற்கு நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டது.

2. பார்வை இரண்டில் படிக்கப்பட்ட அரசாணையின்படி, மேலே குறிப்பிடப்பட்டுள்ள 18–ஆம் கால்வாய் திட்டப் பணிக்கான மதிப்பீட்டினை கீழ்கண்ட மூன்று பகுதிகளாக பிரித்து செயல்படுத்த அரசு ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டது:-

| | |
|---|---|
| ரீச் 1 (பகுதி–I) | தலை மதகு குறுக்கு கல் கட்டிடம் வடிகால் பணிகள் உள்ளிட்ட எல்.எஸ். 0 முதல் 10 கி.மீ. வரை பிரதானக் கால்வாய் வெட்டுதல். |
| ரீச் 2 (பகுதி–II) | வழங்கு மதகு, புதிய குளம் அமைத்தல், குறுக்கு கல் கட்டிடம் மற்றும் குறுக்கு வடிகால்கள் உள்ளிட்ட எல்.எஸ். 10 முதல் 24 கி.மீ. வரை பிரதானக் கால்வாய் வெட்டுதல். |
| ரீச் 3 (பகுதி–III) | வழங்கு மதகு, வழங்கு கால்வாய் புதிய குளம் அமைத்தல், குறுக்கு கல் கட்டிடம் மற்றும் குறுக்கு வடிகால் பணிகள் உள்ளிட்ட எல்.எஸ். 24 முதல் 38.95 கி.மீ. வரை பிரதானக் கால்வாய் வெட்டுதல். |

3. பார்வை மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், மேலே குறிப்பிடப்பட்டுள்ள 18–ஆம் கால்வாய் திட்டத்திற்கு ரூ.2860 இலட்சத்திற்கு திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணையிடப்பட்டது.

4. பார்வை நான்கில் படிக்கப்பட்ட முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை அவர்களின் கடிதத்தில் தெரிவித்தவாறு திட்டத்தை நடைமுறைபடுத்தும் வேளையில், கால்வாய் வழி மாறுபாட்டினாலும், கால்வாயை அகழ்ந்தபோது எதிர்பாராத பாறைகள் இருந்ததாலும், அவைகளை உடைத்ததினால் ஏற்பட்ட செலவுகள் பற்றி முன்பே மதிப்பிடாததாலும், செலவினம் ரூ.554.73 இலட்சம் என அதிகரித்தது. ஆயினும், இதர பணிகளின் மதிப்பீட்டில் ரூ.59.73 இலட்சம் சேமிப்பு காணப்பட்டதால், கூடுதல் செலவினம் ரூ.495 இலட்சம் என கணக்கிடப்பட்டு ஏற்கனவே ஒப்புதலளிக்கப்பட்ட ரூ.2860 இலட்சம் மதிப்பீட்டிற்குப் பதிலாக ரூ.495 இலட்சம் கூடுதல் செலவினத்தையும் சேர்த்து ரூ.3355 இலட்சம் செலவினத்திற்கு இரண்டாவது திருத்திய நிர்வாக ஒப்புதல் பெற்று தருமாறு அரசைக் கேட்டுக் கொண்டுள்ளார். அச்செலவினம் பற்றிய ஒப்பீட்டு பட்டியலை கீழ்க்கண்டவாறு தெரிவித்துள்ளார்:-

| பணியின் விவரங்கள் | பொதுப்பணித் துறையின் 21.5.99 தேதியிட்ட அரசு ஆணை நிலை எண். 200ல் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது | பொதுப்பணித் துறையின் 1.3.06 தேதியிட்ட அரசு ஆணை நிலை எண். 56ல் திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப் பட்டது | தலைமைப் பொறியாள –ரால் அனுப்பப் பட்ட 2வது திருத்திய மதிப்பீடு | கூடுதல் | சேமிப்பு | கூடுதல் மற்றும் சேமிப்பு பற்றிய விளக்கம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | |
| பகுதி 1 | 785.90 | 653.55 | 652.22 | – | 1.33 | (உள்ளபடியே) |
| பகுதி 2 | 962.70 | 922.92 | 870.94 | – | 51.98 | 3 குளங்களை நீக்கியதால் ஏற்பட்ட சேமிப்பு வகைப்பாடு. |
| பகுதி 3 | 562.90 | 591.81 | 645.59 | 53.78 | – | மண்ணின் தர மாற்றத்தால் மிகை செலவு மற்றும் வயல்தாள் கட்டுதல் வழிகாட்டும் கால்வாய் அமைத்தல். வடிகால் குறுக்கே கால்வாய் வடிவமைப்பு மாற்றம். 57 பணிகளுக்–கான வடிகால் குறுக்கே கால்வாய் வடிவமைப்பு–களில் 44 பணிகள் மட்டுமே செய்து முடிக்கப் பட்டன எஞ்சியவை செய்து முடிக்கப் படவில்லை என்றும் ஆய்வில் தெரியவந்தது. |

| பணியின் விவரங்கள் | பொதுப்பணித் துறையின் 21.5.99 தேதியிட்ட அரசு ஆணை நிலை எண். 200ல் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது | பொதுப்பணித் துறையின் 1.3.06 தேதியிட்ட அரசு ஆணை நிலை எண். 56ல் திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப் பட்டது | தலைமைப் பொறியாளா–ரால் அனுப்பப் பட்ட 2வது திருத்திய மதிப்பீடு | கூடுதல் | சேமிப்பு | கூடுதல் மற்றும் சேமிப்பு பற்றிய விளக்கம் |
|---|---|---|---|---|---|---|
| | **(ரூபாய் இலட்சத்தில்)** | | | | | |
| புதிய அணை கட்டுதல் | – | 150.00 | 219.00 | 69.00 | – | தற்போதைய விலை விகிதப்படி கூடுதல் மற்றும் ஒப்பந்தப்புள்ளி கூடுதல். |
| சுத்தகங்கை கரையை மேம்படுத்துதல் மற்றும் சிடி பணிகள் | – | 60.00 | 73.40 | 13.40 | – | ஒப்பந்தப்புள்ளி கூடுதல் |
| மூன்றாவது பகுதிக்கான சிடி பணிகள் | – | – | 68.89 | 68.89 | – | ஸ்தல நிலைக் கேற்றவாறு வடிவமைப்பில் மாற்றம் |
| மூன்று பகுதிகளிலும் 11 எஸ்ஜி ஷட்டர் அமைத்தல் | – | – | 5.78 | 5.78 | – | முதல் திருத்திய மதிப்பீட்டில் சேர்க்காமல் விட்டது, எஃகு விலை கூடுதல் |
| கட்டிடம் | 5.00 | 4.00 | 1.28 | 0.00 | 2.72 | – |
| தண்ணீர் வழங்கும் ஏற்பாடு | 2.00 | 1.00 | Nil | 0.00 | 1.00 | – |
| கருவிகள் மற்றும் இயந்திரம் | 2.00 | 1.00 | 0.17 | 0.00 | 0.83 | – |
| கால்வாய் தோண்டும் பணியிடையே உள்ள மின்சார கம்பங்கள் மற்றும் டிரான்ஸ்பார்மர் மாற்றுதல் | – | 13.00 | 20.00 | 7.00 | – | கால்வாய் அமைப்பில் உள்ள மின்சார கம்பங்களின் இடம் மாற்றியது மற்றும் மாற்றுதல் |

| பணியின் விவரங்கள் | பொதுப்பணித் துறையின் 21.5.99 தேதியிட்ட அரசு ஆணை நிலை எண். 200ல் நிர்வாக ஒப்புதல் வழங்கியுள்ளது | பொதுப்பணித் துறையின் 1.3.06 தேதியிட்ட அரசு ஆணை நிலை எண். 56ல் திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப் பட்டது | தலைமைப் பொறியாள–ரால் அனுப்பப் பட்ட 2வது திருத்திய மதிப்பீடு | கூடுதல் | சேமிப்பு | கூடுதல் மற்றும் சேமிப்பு பற்றிய விளக்கம் |
|---|---|---|---|---|---|---|
| | (ரூபாய் இலட்சத்தில்) | | | | | |
| நில எடுப்புப் பணிகள் | 268.50 | 270.00 | 270.00 | – | – | – |
| வன நிலங்கள் | – | – | 65.00 | 65.00 | – | வன நிலங்களுக்கான இழப்பீட்டுத் தொகை |
| விளம்பர செலவுகள் | 5.00 | 4.00 | 6.00 | 2.00 | – | அணைக்கட்டிற்கான ஒப்பந்தப்புள்ளி விளம்பரம் மூலம் கூடுதல் செலவு |
| ஆவண செலவுகள் | 1.00 | 1.00 | 1.00 | 0.00 | – | – |
| நிழற்பட செலவுகள் | 1.00 | 1.00 | 1.00 | 0.00 | – | – |
| தணிக்கை மற்றும் கணக்குகள் | 3.00 | 1.00 | 0.28 | 0.00 | 0.72 | – |
| நில அளவை | 6.00 | 2.00 | 1.85 | 0.00 | 0.15 | – |
| அலுவலக தளவாடங்களை பராமரித்தல் | 2.00 | 1.00 | Nil | 0.00 | 1.00 | – |
| பணியாளர் தொகுதிக்கான செலவு (Establishment Charges) | 30.00 | 14.00 | 21.00 | 7.00 | – | திட்டம் முடியும் வரை பணிகளை மேற்பார்வை செய்ததால் ஏற்பட்ட மிகை |
| தொழிலாளர் நல நிதி (0.30%) | – | 8.72 | 10.27 | 1.55 | – | உள்ளபடியே (as per actual) |
| செலவு அதிகரித்தல் (Due to escalation) | – | 150.00 | 411.33 | 261.33 | – | மூன்று பகுதிகளின் பணி மதிப்பீட்டில் (20% கூடுதல்) |
| Contingencies | 15.00 | 10.00 | 10.00 | – | – | |
| மொத்தம் | 2652.00 | 2860.00 | 3355.00 | 554.73 | 59.73 | |

கூடுதல் செலவினம் : ரூ.554.73 இலட்சம் – சேமிப்பு ரூ.59.73 இலட்சம் = ரூ.495 இலட்சம்.

மேலே மூன்றில் படிக்கப்பட்ட அரசாணையில், திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை ரூ.2860 இலட்சம் + கூடுதல் செலவினம் ரூ.495 இலட்சம் = இரண்டாவதாக கோரப்பட்ட திருத்திய மதிப்பீடு: ரூ.3355 இலட்சம் (அல்லது) ரூ.33.55 கோடியாகும். ஆயினும், நபார்டு வங்கியிடம் பெறப்பட்ட நிதியுதவி ரூ.2456.18 இலட்சம் ஆகும். மீதமுள்ள ரூ.898.82 இலட்சம் மாநில கணக்கிலிருந்து சரிகட்ட வேண்டியுள்ளது. இந்நிலையில் இத்திட்டத்திற்காக ரூ.3355 இலட்சம் மதிப்பீட்டிற்கு முதன்மை தலைமைப் பொறியாளர் அரசிடம் இரண்டாவது திருத்திய நிர்வாக ஒப்புதல் கோரியுள்ளார்.

5. முதன்மை தலைமைப் பொறியாளரின் கருத்துருவை நன்கு பரிசீலனை செய்த பின்னர், அதனை ஏற்று தேனி மாவட்டம் உத்தமபாளையம் வட்டம், வைரவனார் அணைக்கட்டில் 18ஆம் கால்வாய் அமைக்கும் திட்டத்திற்கு ரூ.33,55,00,000/–க்கு (ரூபாய் முப்பத்தி மூன்று கோடியே ஐம்பத்தைந்து இலட்சம் மட்டும்) இரண்டாம் திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கி ஆணை வெளியிடப்படுகிறது. இதில் ரூ.28.60 கோடிக்கு ஏற்கனவே முதல் திருத்திய நிர்வாக ஆணை அனுமதியளித்துள்ளதால் மீதமுள்ள ரூ.4,95,00,000/– (ரூபாய் நான்கு கோடியே தொன்னூற்றைந்து இலட்சம் மட்டும்)–க்கு மட்டும் செலவு செய்ய அனுமதி வழங்கப்படுகிறது.

6. மேலே பத்தி 5–ல் ஒப்புதலளிக்கப்பட்ட இத்திட்டத்திற்கான செலவினம் கீழ்க்கண்ட கணக்குத் தலைப்பில் பற்று வைக்கப்பட வேண்டும்.

> ”4701 – பெரிய, நடுத்தர பாசனத் திட்டங்கள் குறித்த மூலதனச் செலவு – 03 நடுத்தரப் பாசனம் – வணிகத்தன்மை வாய்ந்தது – 316 வைரவனார் ஆற்றின் குறுக்கே 18– ஆம் கால்வாய் அமைத்தல் – பதினொன்றாம் ஐந்தாண்டு திட்டப் பணிகள் – II மாநில திட்டம் – JA - கால்வாய்கள் – 16 பெரும் பணிகள் ( த.தொகு 4701 – 03– 316–JA - 1600).”

7. மேலே பத்தி 5–ல் இரண்டாம் திருத்திய நிர்வாக ஒப்புதல் வழங்கப்பட்ட தொகை ரூ.33,55,00,000/–யில் ஏற்கனவே வழங்கப்பட்ட முதல் திருத்திய நிர்வாக ஒப்புதலில் உள்ள ரூ.28,60,00,000/– போக மீதமுள்ள ரூ.4,95,00,000/–யினை 2009–2010 ஆம் ஆண்டு திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் வழங்கப்படும். 2009–2010 ஆம் ஆண்டு திருத்திய / இறுதி திருத்திய மதிப்பீட்டில் ரூ.4,95,00,000/–யினை ஒதுக்கப்படுவதை எதிர்நோக்கி, இச்செலவினத்தை மேற்கொள்ள முதன்மைத் தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதார அமைப்பு மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது) அவர்கள் அனுமதிக்கப்படுகிறார்.

8. இவ்வரசாணை நிதித்துறையின் அ.சா.கு. எண். 32223/பொ.ப.II/2009, நாள் 16.06.2009 மற்றும் கூடுதல் நிதியொதுக்கப் பேரேடு எண். 257 (இருநூற்று ஐம்பத்து ஏழு) ஒப்புதலுடன் வெளியிடப்படுகிறது.

// ஆளுநரின் ஆணைப்படி //

சு. இராமசுந்தரம்,
அரசு முதன்மைச் செயலாளர்.

பெறுநர்
முதன்மை தலைமைப் பொறியாளர், நீர்வள ஆதாரத்துறை மற்றும் தலைமைப் பொறியாளர் (பொது), சென்னை – 5.
தலைமைப் பொறியாளர் (திட்ட உருவாக்கம்), நீர்வள ஆதாரத்துறை, சென்னை – 5.
நீர்வள ஆதாரத்துறையின் மதுரை மண்டலத் தலைமைப் பொறியாளர், மதுரை.

முதன்மை கணக்காய்வு தலைவர் (A&E), சென்னை – 18.
முதன்மை கணக்காய்வு தலைவர் (Audit-I), சென்னை – 18.
மாவட்ட ஆட்சித் தலைவர், மதுரை / தேனி.

நகல்
நிதி [பொ.ப.II / வ.செ.(பொ.II)] த்துறை, சென்னை–9.
பொதுப்பணித்துறையில் உள்ள அனைத்து நீர்ப்பாசனப் பிரிவுகள்.
அரசாணை (நிலை) எண். 56, பொதுப்பணித்துறை, நாள் 01.03.2006.
முதலமைச்சர் அலுவலகம், சென்னை–9.
பொதுப்பணித்துறை அமைச்சர் அலுவலகம், சென்னை–9.
இருப்புக் கோப்பு.

// ஆணைப்படி அனுப்பப்படுகிறது //

பிரிவு அலுவலர்